# திருக்காரைக் கோயில் வரலாறு

G.23:38 21163T'
N53
112837

# திருக்கானூர்க் கோயில் வரலாறு

திருச்சிராப்பள்ளி ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்,
அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் ( H. R. & C. E. )
ஆதரவில் பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - FEB 1956
MADRAS

மேற்படி தேவஸ்தானம் தர்மகர்த்தர்கள் ( Trustees )

**திரு. V. A. வெங்கட்டராம ஐயர் அவர்கள்**

**திரு. V. S. வைத்திராம ஐயர் அவர்கள்**

ஆகியோரால் வெளியிடப் பெற்றது.

தேவஸ்தான வெளியீடு

1956.

உரிமை செய்யப்பெற்றது ]

[ விலை 6 அணா.

Q23:38.21193T
N56

TAMIL NADU ARCHIVES LIBRARY
112837

# முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல் மிகவும் நல்லது. அவைகளுள் தஞ்சாவூர் ஜில்லா — தஞ்சாவூர் தாலூகாவில் பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே, திருக்காட்டுப்பள்ளி — விஷ்ணம்பேட்டை மார்க்கமாக 7 மைல் தூரத்தில் திருக்காறூர் என்னும் திருத்தலம் கொள்ளிட நதியின் தென்கரையில் தனி இடத்தில் அமைந்துள்ளது. தேவாரம் அருளிய மூவராலும் பாடல் பெற்ற பெருமையுடையது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்து கொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious and Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு சுருக்கமாய் எழுதப் பெற்று, H. R. & C. E. உதவி - ஆணையாளர் (Asst. Commissioner) திரு. A. சக்கரை B. A., B. L. அவர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தலப்பெருமைகளை வரலாறுகளாக வெளியிடச் செய்வதிலும், தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்புத் தலைவர்கள் வேண்டுவன செய்து வருகிறார்கள். இதில் கோயில் விளக்கமும், தலப்பெருமைகளும், தேவாரம் முதலிய துதிப்பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அன்பர்கள் படித்துத் திருக்காறூர்ப் பெருமானின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி
மலைக்கோட்டை
27—12—55

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ்ப் புலவர்.

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கோயிலும் இருப்பிடமும் | ... 5 |
| 2. | கோயிலின் அமைப்பு | ... 9 |
| 3. | கோயிலின் படம் | ... 10 |
| 4. | மூர்த்திகளின் பெயர்கள் | ... 11 |
| 5. | தலப்பெருமைகள் | ... 11 |
| 6. | திருப்பணிகள் | ... 13 |
| 7. | தினப்பூஜையும், விழாக்களும் | ... 14 |
| 8. | வருமானமும், சொத்துக்களும் | ... 14 |
| 9. | நிர்வாகம் | ... 14 |
| 10. | கல்வெட்டுக்கள் | ... 15 |
| 11. | வரலாறுகள் | ... 15 |
| 12. | துதிப்பாடல்கள் | ... 18 |


## கோயில் விளக்கம்

**கோயில்** :—திருக்காஜூர்.
**இடம்** :—விஷ்ணும்பேட்டை.
**மூலவர்** :—செம்மேனிநாதர்.
**அம்மன்** :—சிவயோகநாயகி.
**தீர்த்தம்** :—கொள்ளிடம்.
**மரம்** :—வில்வமரம்.

தஞ்சாவூர் ஜில்லா - பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே, திருக்காட்டுப்பள்ளி - விஷ்ணும்பேட்டை வழியாக 7 மைல் தூரத்தில், கொள்ளிட நதியின் தென் கரையில் உள்ளது. தேவாரம் பாடிய மூவராலும் பாடல் பெற்ற பெருமையுடையது.



சிவயோகநாயகி

# திருக்கானூர்க் கோயில் வரலாறு

"கல்வி ஞானக் கலைப் பொருள் ஆயவன்
செல்வம் மல்கு திருக்கானூர் ஈசனை
எல்லியும் பகலும் மிசைவானவா
சொல்லிடீர் நுந்துயரங்கள் தீரவே"

(திருநாவுக்கரசர்)

## 1. கோயிலும், இருப்பிடமும்.

தென்னாடாகிய தமிழ்நாடு, மிகுதியான கோயில்களைக் கொண்ட இடமாகும். நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், சோலைகளும், வாவிகளும், சாலைகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத் தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும், விமானங்களும், தூபிகளும் காண்போர்க்குத் தூரத்திலிருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத் தரும் நிலங்கள் அமைந்திருப்பதுபோல், உள்ளத்துக்கு – ஆன்மாவுக்கு உணவாகிய பக்தி உணர்ச்சியை உண்டாக்கும் பாங்குடைய ஆலயங்கள் பல அணிகளாக விளங்குகின்றன. "திருக்கோயில் இல்லாத திருவிலூரும், பாங்கினொடு பல தளிகள் இல்லாவூரும் அவை எல்லாம் ஊரல்ல" என்ற படிக்கில்லாமல் நாட்டின் பல இடங்களிலும் சைவ – வைணவத் தலங்கள் பல ஆங்காங்கு மிளிர்கின்றன. இவ்வகையில் தென்னாடு தெய்வ மணங்கமழும் திருநாடாகத் திகழ்கிறது.

யாவற்றையும் கடந்த பரம் பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம், தன்கடந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகின்ருன். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுதும் பால் மறைந்திருந்த போதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும், பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப்படுவது போலவும், ("பளிங்கின் நிழலுட் பதித்த சோதியானை"—அப்பர்) நிலத்துக்கடியில் நீர் இருந்த போதிலும், தோண்டிய இடத்தில்தானே நீர் தோன்றுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்த போதிலும், பெரியோர்கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவது போல வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே" (சிவஞான சித்தியார்.)

"எங்கும் சிவனிருப்பன் ஆனுலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்,
ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்
பாவுமுலைக் கண்மிகுதிப்பார்"

**(சிவஞானப் பிரகாச வெண்பா)**



இவ்வாறு புறத்தே கோயில் கொண்டு விளங்கும் இறைவன், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு அருள் செய்கின்ருன். ஆதலின் பெறுதற்கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும் கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினுல் வழிபட்டு, அவன் வகுத்த நன்னெறியில் சென்று, அவனருளைப் பெற முயலுதல் சிறந்த கடமையாகும். "உடம்பினைப்பெற்ற பயனுவதெல்லாம், உடம்பில் உத்தமனைக் காண்" என்று ஔவையாரும் கூறியுள்ளார்.

தென்னுடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன, அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத் தலைவர்களால் தேவாரப் பதிகம் பாடப் பெற்ற தலங்களும், பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப்பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் அன்பர்களால் அமைக்கப் பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன.

இவைகளில் தேவாரப்பாடல் பெற்ற 274 தலங்களில், காவிரிநதிக்கு வடகரையில் உள்ள கோயில்களில் 56வது தலமாக **திருக்கானூர்** என்னும் சிறந்த தலம் உள்ளது. எப்போதும் வற்ருத நீர்வளமுடைய காவிரிநதி பாயும் சோழநாட்டில், தஞ்சாவூர் ஜில்லா—தஞ்சாவூர் தாலூகாவில், திருச்சி-தஞ்சாவூர் இருப்புப் பாதையில் பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து வடக்கே 7 மைல் தூரத்தில் கொள்ளிடநதியை அடுத்துத்

தென்கரையில் கோயில் அமைந்துள்ளது. பூதலூரி லிருந்து, திருக்காட்டுப்பள்ளி, விஷ்ணும்பேட்டை மார்க்கமாகக் கோயிலை அடையவேண்டும், விஷ்ணும் பேட்டையிலிருந்து சரியான பாதை இல்லை. வயல் மார்க்கமாகவும், கரைமார்க்கமாகவும் சேரலாம். கோயில் இருக்கும் இடம் காடாக இருப்பதால் பகல் நேரத்திலேயே சென்று திரும்பவேண்டும். இரவில் போகமுடியாது. காட்டில் அமைந்திருப்பதால் திருக்கானூர் என்று பெயர் ஏற்பட்டது. கான் என்பது காடு, ஒரு காலத்தில் இவ்விடம் இட்சுவன மாக — கரும்புக் காடாக இருந்ததாகச் சொல்லப்படு கிறது. இதுபோலவே பிற கோயில்களும், தில்லை வனம், கஜவனம், கடம்பவனம். வில்வவனம் முதலிய பெயர்களைப் பெற்றுள்ளன.

**விஷ்ணும்பேட்டை :**—ஒரு காலத்தில் கொள்ளிட நதியில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ளத் துன்பத் தால் திருக்கானூரில் உள்ள மக்கள் தென் பகுதியில் விஷ்ணும்பேட்டை என்னும் ஊருக்குக் குடியேறி அவ்விடத்தில் ஓர் சிவன் கோயிலையும், பெருமாள் கோயிலையும் நிர்மாணித்து வழிபட்டு வரலானார்கள். இதனால் திருக்கானூரில் கோயில்மட்டும் உள்ளது. குடிகள் இல்லை. பூஜை செய்பவர்களும் வெளியி லிருந்தே வந்து பூசித்துச் செல்கிறார்கள். விஷ்ணும் பேட்டையில் வைணவி என்னும் செல்லியம்மன் கோயில் உள்ளது. இவ்வூரில் சுமார் 1000 பேர்கள் இருக்கலாம். பஞ்சாயத்து ஆட்சியில் அமைந் துள்ளது.

திருக்கானூர் செல்வதற்குச் சரியான போக்கு வரவு வசதிகள் இல்லை. பூதலூரிலிருந்து திருக்




காட்டுப்பள்ளி, சாத்தனூர் வழியாகவும், கண்டியூர் வழியாகவும் திருவையாற்றிற்கு மோட்டார் பஸ் வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

## 2. கோயிலின் அமைப்பு


கொள்ளிடநதியை அடுத்துத் தென்பக்கத்தில் கோயில் அமைந்துள்ளது. தற்போது ஊரில்லை. கோயில் மட்டும் உள்ளது. கோயிலைச் சுற்றிலும் மணல் மேடுகள் உள்ளன. ஆங்காங்கு பனை மரங் களும், ஆல மரங்களும் நிறைந்துள்ளன. கோயில் பூமி மட்டத்திற்கும் தாழ்வாக உள்ளது. செங்கல் லால் அமைத்த பழங்கால மதிற் சுவர் இடிந்தும், சரிந்தும் காணப்படுகிறது. சுவாமி—அம்மன் கோயில்களின் விமான மண்டபங்கள் மட்டும் கல் லால் அமைந்தவை. முன்னுள்ள செங்கற் கோபுரம் மூன்று கண்களையுடையது. கோயில் பள்ளத்திலிருப் பதால் முன்னேயுள்ள படிகளின் வழியாய் இறங்கிச் செல்லவேண்டும். சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கி யும், அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. உள்பிராகாரத்தில் மேல் புறத்தில் விநாயகர், சுப்பிர மணியர் சந்நிதிகளும், வில்வ – மாமரங்களும், சண்டி கேஸ்வரர் சந்நிதியும், கீழ்புறத்தில் மடைப்பள்ளியும், கிணறும், பைரவர் சந்நிதியும், நந்தி மண்டபமும் உள்ளன. உள் மண்டபத்தைச் சுற்றிலும் ஐயனார், மதுரைவீரன் முதலிய கற்சிலைகள் நிலத்தில் இருக் கின்றன. கோயிலை அடுத்து வடக்கில் கொள்ளிட நதி ஓடுகிறது. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

## 3. கோயிலின் படம்




**எண்களின் விளக்கம் :—**

1. படிக்கட்டு
2. முன்கோபுர வாயில்
3. மடைப்பள்ளி
4. கிணறு
5. நந்தி
6. விநாயகர்
7. சுப்பிரமணியர்
8. வில்வமரம்—மாமரம்
9. சண்டிகேஸ்வரர்
10. அம்மன் கோவில்
11. பைரவர்
12. உள் மண்டப வாயில்
13. மூலலிங்கம்
14. கொள்ளிட நதி






## 4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்துச் சுவாமியின் பெயர் செம்மேனி நாதர் என்பது. இட்சுவனேஸ்வரர் என்றும், கரும்பேஸ்வரர் என்றும் சொல்லப்படுகின்றன. தேவியின் பெயர் சிவயோக நாயகி என்பது. அம்மையார் சிவயோகம் செய்து கொண்டிருந்த காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டது. சௌந்தர நாயகி என்றும் பெயர் வழங்குகிறது. சுவாமி—அம்மனின் சிலைகள் சாளக்கிராமச்சிலையால் அமைந்தவை. மேலும் பிரதோஷ உற்சவ மூர்த்திகளும் உண்டு. கோயிலுக்குரிய முக்கிய மரங்கள் (தல விருட்சம்) வில்வ மரமும், மா மரமும் ஆகும். தீர்த்தம் கொள்ளிடநதி. விஷ்ணும்பேட்டையில் உள்ள சிவன் கோயிலில், சுவாமிக்கு கைலாசநாதர் என்பதும், அம்மனுக்கு காமாட்சி என்பதும் பெயர்களாக விளங்குகின்றன. பெருமாளின் பெயர் வேணுகோபாலசுவாமி என்பது.

## 5. தலப் பெருமைகள்

கோயில் பழமையான சிறிய கோயில். மிகப் பெருமைகளையுடையது. புதையற் பொருள் போல, மணல் மேடுகளுக்கு நடுவில் கோயில் பள்ளத்தில் உள்ளது. கொள்ளிட நதியைப் பக்கத்தில் கொண்டுள்ளது. இவ்விடத்தில் தேவியார் சிவயோகத்தில் அமர்ந்திருந்தபோது இறைவர் அழற்பிழம்பாகத் தோன்றிக் காட்சி தந்தருளினார் என்பர். மனதை ஒருமுகப்படுத்தித் தவஞ்செய்வதற்கேற்ற இடம். தேவார ஆசிரியர்கள் மூவரும் பாடிய தேவாரப்பாடல்

களையுடையது. திருநாவுக்கரசர் இத்தலத்துப் பெருமானைக் கானூர்முளை என்றும், கானூர் கருத்தன் என்றும் போற்றுகிறார். சிவ பக்தர்கள் சேர்திருக்கானூர் என்று ஊரைப்புகழ்ந்துள்ளார். திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வந்தபோது பல இயற்கைக்காட்சிகளைக்கண்டார். காந்தள் மலர்கள் நிறையப்பூத்திருந்தன. சோலைகளில் பல மரங்கள் நெருங்கிச் சோலைகளில் மேகங்கள் வந்துபடிந்ததாம். மலர்ந்த பூக்களில் களிப்பையுடைய வண்டுகள், வீணையின் ஒலிபோல் இசைத்துக்கொண்டிருக்கும். இறைவன் கோயில் கொண்டிருப்பதால், சோலைகள் தெய்வத்தன்மையுடையதாய் விளங்கும். சோலைகளில் நல்ல மணம் வீசிக்கொண்டிருக்கும். இத்தகைய காட்சிகளைத் திருஞானசம்பந்தர், தாம் பாடிய தேவாரத்தில் அமைத்துக்காட்டியுள்ளார்,

“காந்தள் விம்முகானூர், கறையார் சோலைக் கானூர், கார்கொள் சோலைக்கானூர், பூவில் வண்டு யாழ் செய்கானூர், தேவார் சோலைக்கானூர், கந்தம் மல்குகானூர்” என்னும் தொடர்கள் திருக்கானூரின் இயற்கை வளத்தைக்காட்டுவன. இவ்வாறே பெருமானையும் “சாந்தநீற்றர், பிறையார்சடையார், விண்ணோர் பெருமான், கறைக்கண்டத்தார், ஒளிவெண் பிறையார் தேவதேவர், பவளவண்ணர், எந்தை பெம்மான். சேடர்” என்னும் தொடர் மொழிகளால் போற்றிப் புகழ்ந்துள்ளார். சுந்தரர் “கானூர்க் கட்டியே” என்று காட்டுகின்றார். சோலைகளில் வண்டுகள் ஒலித்துக்கொண்டிருப்பதைத் தற்போதிலும்



காணலாம். ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் 3 நாட்களில் சூரியனின் ஒளி மூலவர்மேல் விழுவதுண்டு. இவ்வாறு மூவரும் தேவாரப்பாடல்கள் பாடிப் பாராட்டிய பழமையான கோயில், இக்காலத்தில் தனிமையான இடத்தில் அமைந்துள்ளது. சென்ற ஆண்டிலிருந்து கோயில் மூர்த்திகளுக்கு, லட்சார்ச்சனை, சந்தனக்காப்பு முதலிய விசேட வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

## 6. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய திருக்கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி அவ்வப்போது ஆவன செய்து பாதுகாக்கவேண்டும். புதிய கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும் பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்பர். மேலும் இக்கோயில் கொள்ளிடநதிக் கரையில் இருப்பதால் வெள்ளத்தால் அவ்வப்பொழுது விபத்து ஏற்படலாம். இதற்கு முன்னும் வெள்ளத்தால் மணல் மேடுகள் ஏற்பட்டுள்ளன. கோயில் விளங்கக் குடி விளங்கும் என்பதால் கோயிலைக் கண்காணித்துப் பாதுகாக்கவேண்டும். பல ஆண்டுகளுக்குமுன் இக் கோயிலில் சில திருப்பணிகள் நடந்துள்ளன. தற்போது மதிற்சுவர்கள், கோபுரம், மண்டபங்கள் முதலியன திருப்பணி செய்யவேண்டிய நிலையில் உள்ளன. இத்திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வகையில் சிவநேசச் செல்வர்கள் ஒல்லும் வகையில் உதவி செய்வார்களாக.

## 7. தினப்பூஜையும், விழாக்களும்

இக்கோயில் மூர்த்திகளுக்குத் தினந்தோறும் காலை மாலை என்னும் இரண்டு காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்கின்றன. ஆண்டுதோறும் ஏப்ரல் மாதத்தில் 2, 3, 4 தேதிகளில் சூரியனின் ஒளி மூலலிங்கத்தில் படிவதுண்டு. இது சூரிய பூஜையாகக் கருதப்படும். தை மாதம் பௌர்ணமியை அடுத்த வெள்ளிக்கிழமையில் அம்மனுக்குச் சந்தனக் காப்பு நடைபெறும். பிரதோஷ நாட்களில் தனி வழிபாடு உண்டு. மற்றும் நவராத்திரி, பைரவாஷ்டமி, மகாவிதிபாதம், விநாயக சதுர்த்தி, கந்தர் சஷ்டி, திருவாதிரை முதலிய விசேட நாட்களில் அந்தந்த மூர்த்திகளுக்கு ஆராதனைகள் நடைபெறும்.

## 8. வருமானமும், சொத்துக்களும்

இக்கோயிலுக்குச் சொந்தமாக 15 ஏக்கர் நன்செய் நிலமும், 15 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளன. இவைகளின் மூலமாயும், மரங்கள் குத்தகை மூலமாயும் ஆண்டுதோறும் சுமார் இரண்டாயிரம் ரூபாய் வருமானம் வரும். அரசியலார் மூலம் மோகினித் தொகை ரூ. 26–4–0 கிடைக்கிறது.

## 9. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் பஞ்சாயத்தார் ஆட்சியிலிருந்து வந்தது. பிறகு தேவஸ்தானக் கமிட்டியாரின் மேற்பார்வையிலிருந்தது. பிறகு 1935-ம் ஆண்டிலிருந்து சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர்நிர்வாகத்தில் இருந்துவருகிறது. மேற்படி இலாகாவால் நியமிக்கப்பெற்ற தர்மகர்த்தர்கள் இருவர் (Trustees) கோயில் காரியங்களைக் கவனித்துவருகிறார்கள்.



## 10. கல்வெட்டுக்கள்

சுவாமிகோயில் விமானமண்டபத்தின் அடிவரிசைக் கற்களில் சில கல்வெட்டுக்கள் சிதைந்தும், தொடர்பின்றியும் காணப்படுகின்றன. தென்கரை ராஜராஜவளநாடு, பொய்கையூர் நாடு, கரிகால்சோழ-சதுர்வேதிமங்கலம் முதலிய தொடர்கள் புலப்படுகின்றன. கடைசியில் நாராயணன் எழுத்து என்ற முடிவு காணப்படுகிறது. கல்வெட்டின் முழு விவரங்கள் தெரியவில்லை. சுவாமிகோயிலின் மேல்விட்டத்தில் மீனின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன, இவை பாண்டியர்களின் அடையாளங்களாய் இருக்கலாம். முன் கோபுரத்தின் மேலிடத்தில் ஓர் வட்டம், பாம்பு முதலிய வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோபுரவாயிலின் மறைந்துள்ள அடித்தளத்திலும் சில கல்வெட்டுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

112837

## 11. வரலாறுகள்

**மூவர் வழிபட்டது** :—சைவ சமயத் தலைவர்களில் திருஞானசம்பந்தர், பல தலங்களுக்கும் சென்று வழிபட்டு வரும்போது, கொள்ளிடத்திற்கு வடகரையில் உள்ள திருமழபாடியில் எழுந்தருளிய பெருமானைத்

தரிசித்துப் பிறகு நதியைக் கடந்து திருக்கானூர்ப் பெருமானை வழிபட்டுப் பதிகம்பாடிப் பிறகு அன்பில் ஆலந்துறை சென்று வணங்கி மாந்துறைப் பதியை அணைந்தார். இவ்வரலாற்றைத் தெரிவிக்கும் பெரிய புராணப் பாடல் :—

"அதன்மருங்கு கடந்தருளால் **திருக்கானூர்**
**பணிந்தேத்தி** ஆன்ற சைவ
முதன்மறையோர் அன்பிலா லந்துறையின்
முன்னவனைத் தொழுது போற்றிப்
பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார்
பயில்பதியும் பணிந்துபாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாந்
துறை அணைந்தார் மணிநூல்மார்பர்."

இவ்வாறே திருநாவுக்கரசரும் இத்தலத்துக்கு வந்து பதிகம் பாடியுள்ளார். மேலும் தாம் பாடிய க்ஷேத்திரக் கோவைப் பதிகத்திலும் இவ்வூரைக் குறித்துப் பாடியுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும், ஊர்த்தொகைப் பதிகத்தில் இத்தலத்தைக் குறித்துக் "**கானூர்க் கட்டியே**" என்று போற்றியுள்ளார். அப் பாடல்கள் பின்னே சேர்க்கப்பெற்றுள்ளன.

### சோழமாதேவிக்கு அருளியது :—

திருச்சிராப்பள்ளி — உறையூரில் அரசாண்ட பராந்தக சோழன், சாரமாமுனிவருடைய நந்தவனத்திலிருந்து களவினால் கிடைத்த செவ்வந்திமலர்களைத் தன் பத்தினிகளுக்குக் கொடுத்தான். மூத்த மனைவி,



தான் அணியாமல் அம்மலரைச் சிவபிரானுக்கு அணிவித்தாள். சோழ அரசனுடைய குற்றத்திற்காகப் பெருமான் உறையூரில் மண்மாரி பொழியச்செய்தார். சோழன் முதலியோர் ஆற்றைக்கடந்து வெளியேறிய போது, கர்ப்பவதியாயிருந்த சோழனுடைய மூத்த மனைவி, தான் செய்த புண்ணியத்தால் ஆற்றின் வெள்ளப் பெருக்கில் அகப்படாமல் கரையோரத்திலிருந்த இத்தலத்தை அடைந்து பெருமானை வழிபட்டாள். பெருமான் அருளால் இவ்விடத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். இக்குழந்தை பிற்காலத்தில் கரிகாலன் என்று சிறப்புற்று விளங்கியது.

### வேண்டுகோள்.

மூவரால் தேவாரப் பாடல் பெற்ற திருக்கானூர் என்னும் தலம் கொள்ளிட நதிக்கரையில், மணல் மேடுகளுக்கு நடுவில் தனித்த காட்டிடத்தில் அமைந்துள்ளதால், பலரும் எளிதிற் சென்று தரிசிப்பதற்கு முடியாத நிலையில்—சரியான பாதையும், வசதிகளும் இல்லாத நிலைமையில் அமைந்திருப்பதால், தக்கவர்களும், அன்பர்களும் சேர்ந்து நல்ல வழி நடைகளையும், வசதிகளையும் அமைத்துக் கொடுப்பதுடன் கோயிலுக்கும் எவ்வித தீங்கும் நேராதபடிக் கண்காணித்து வருவார்களாக.

## 12. துதிப்பாடல்கள்

### திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகம் :—

வானார்சோதி மன்னுசென்னி வன்னிபுனங் கொன்றைத்
தேனார்போது தானார்கங்கை திங்களொடு சூடி
மானேர்நோக்கி கண்டங் குவப்ப மாலையா டுவார்
கானூர்மேய கண்ணார்நெற்றி ஆனூர் செல்வரே. 1

நீந்தலாகா வெள்ளம்மூழ்கு நீள்சடைதன் மேலோர்
ஏய்ந்தகோணற் பிறையோடரவு கொன்றை எழிலாரப்
போந்தமென்சொல் இன்பம் பயந்த மைந்தரவர்போலாம்
காந்தள்விம்மு கானூர்மேய சாந்த நீற்றாரே. 2

சிறையார் வண்டுந்தேனும் விம்முசெய்ய மலர்க்கொன்றை
மறையார்பாடல் ஆடலோடு மால்விடை மேல்வருவார்
இறையார்வந்தென் இல்புகுந்தென் எழில்நலமுங் கொண்டார்
கறையார்சோலைக் கானூர்மேய பிறையார் சடையாரே. 3

விண்ணார் திங்கட்கண்ணி வெள்ளை மாலையதுசூடித்
தண்ணாரக்கோ டாமைபூண்டு தழைபுன் சடைதாழ
எண்ணாவந்தென் இல்புகுந்தங் கெவ்வநோய் செய்தான்
கண்ணார்சோலைக் கானூர்மேய விண்ணோர் பெருமானே. 4

தார்கொள் கொன்றைக் கண்ணியோடுந் தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாடல் ஆடலோடு சேடராய்வந்து
ஊர்கள்தோறும் ஐயம்ஏற்றென் னுள் வெந்நோய் செய்தார்
கார்கொள்சோலைக் கானூர்மேய கறைக்கண்டத்தாரே. 5

முனிவெள் எலும்பு நீறுநூலும் மூழ்குமார்பராய்
எளிவந்தார்போல் ஐயமென்றென் இல்லை புகுந்துள்ளத்
தெளிவும்நாணுங் கொண்டகள்வர் தேறலார் பூவில்
களிவண்டியாழ்செய் கானூர்மேய ஒளிவெண்பிறையாரே. 6



மூவாவண்ணர்முளை வெண்பிறையர் முறுவல் செய்திங்கே
பூவார்கொன்றை புனைந்துவந்தார் பொக்கம் பலபேசிப்
போவார்போல மால்செய்துள்ளம் புக்கபுரிநூலர்
தேவார்சோலைக் கானூர்மேய தேவதேவரே. 7

தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணிநல்ல
முழவம்மொந்தை மல்குபாடல் செய்கையிட மோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையது கொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே. 8

அந்தமாதி அயனும்மாலும் ஆர்க்கும் அறிவரியான்
சிந்தையுள்ளும் நாவின்மேலும் சென்னியும் மன்னினான்
வந்தென்னுள்ளம் புகுந்துமாலை காலையாடுவான்
கந்தம்மல்கு கானூர்மேய எந்தை பெம்மானே. 9

ஆமையரவோடேன வெண்கொம்பக்கு மாலைபூண்
டாமோர்கள்வர் வெள்ளர்போல உள்வெந் நோய்செய்தார்
ஓமவேத நான்முகனுங் கோணாகணையானும்
சேமமாய செல்வர் கானூர்மேய சேடரே. 10

கழுதுதுஞ்சுங் கங்குலாடுங் கானூர் மேயானைப்
பழுதில்ஞான சம்பந்தன் சொற் பத்தும்பாடியே
தொழுதுபொழுது தோத்திரங்கள் சொல்லி துதித்துநின்று
அழுதுநக்கும் அன்புசெய்வார் அல்லல் அறுப்பாரே. 11

---

### திருநாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகை :—

திருவின் நாதனுஞ் செம்மலர் மேலுறை
உருவ னாயுலகத்தினுயிர்க் கெலாம்
கருவ னாகிமுளைத்தவன் கானூரில்
பரமனை பரஞ்சுடர் காண்மினே. 1

பெண்டிர் மக்கள் பெருந்துணை நன்னிதி
உண்டின்றேயென்று கவன்மின் ஏழைகாள்
கண்டுகொண் மின்னீர் காறூர் முளையினைப்
புண்டரீகப் பொதும்பில் ஒதுங்கியே. 2

தாயத்தார் தமர் நல்நிதி யென்னுமிம்
மாயத்தே கிடந்திட்டு மயங்கிடேல்
காயத்தேயுளன் காறூர் முளையினை
வாயத்தால் வணங்கீர் வினை மாயவே. 3

குறியில் நின்றுண்டு கூறையிலாச்சமண்
நெறியைவிட்டு நிறைகழல் பற்றினேன்
அறியலுற்றிரேல் காறூர் முளையவன்
செறிவு செய்திட்டிருப்பதென் சிந்தையே. 4

பொத்தல் வெண்சுவர்ப் பொல்லாக் குரம்பையை
மெய்த்த தென்று வியந்திடல் ஏழைகாள்
சித்தர் பத்தர்கள் சேர் திருக் காறூரில்
அத்தன் பாதம் அடைதல் கருமமே. 5

கல்வி ஞானம் கலைப்பொரு ளாயவன்
செல்வம் மல்கு திருக்காறூர் ஈசனை
எல்லியும் பகலும் மிசை வானவா
சொல்லிடீர் நுந்துயரங்கள் தீரவே. 6

நீரும் பாரும் நெருப்பும் அருக்கனும்
காரும் மாருதங் காறூர் முளைத்தவன்
சேர்வு மொன்றறியாது திசை திசை
ஓர்வு மென்றிலர் ஓடித் திரிவரே. 7

ஓமத் தோடயன் மாலறி யாவணம்
வீமப் பேரொளி யாய விழுப்பொருள்
காமற் காய்ந்தவன் காறூர் முளைத்தவன்
சேமத் தாவிருப் பாவதென் சிந்தையே. 8



வன்னி கொன்றை எருக்கணிந் தான்மலை
உன்னியே சென் றெடுத்தவன் ஒண் திறல்
தன்னை வீழத்தனி விரல் வைத்தவன்
கன்னி மாமதிற் காறூர் கருத்தனே. 9

---

**திருநாவுக்கரசர் பாடிய க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் :—**

இடைமரு தீங்கோ யிரா மேச்சுரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப்பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக்களூர்
தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடி குற்றாலம் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக்காடு
கடைமுடி காறூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே.

ஆனைக்காவில் அணங்கினை ஆரூர்நிலாய அம்மானைக்
கானப்பேரூர்க் கட்டியைக் காறூர் முளைத்த கரும்பினை
வானப்பேரார் வந்தேத்தும் வாய்மூர்வாழும் வலம்புரியை
மானக்கயிலை மழகளிற்றை மதியைச்சுடரை மறவேனே.
—திருநாவுக்கரசர்

**சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய ஊர்த்தொகை :—**

மருகல் உறைவாய் மாகாளத் தாய்மதியஞ் சடையானே
அருகற் பிணிநின் அடியார் மேலஅகல அருள்வாயே
கருகற் குரலாய் வெண்ணிக்கரும்பே காறூர்க்கட்டியே
பருகப் பணியாய் அடியார்க் குன்னைப் பவளப்படியானே.

**சிவநாமப் பல்தொடை வெண்பா :—**

" சன்மார்க்கர் வாழ்காறூர்த் தையல்சிவ யோகமின்னுள்
நன்மோகச் செம்மேனி நாதனே ".

---

## பொதுப் பாடல்கள்

### விநாயகர்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. 1

— இரட்டை மணிமாலை

### முருகன்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றிபோற்றி. 2

— கந்தபுராணம்

### நடராஜர்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். 3

— பெரிய புராணம்

### சிவபெருமான்

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடுமாகில் அவன்தனையான்
பவனெனு நாமம் பிடித்துத்திரிந்து பன்னாள் அழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழியான் என்றெதிர்ப்படுமே

— அப்பர்

### தேவியார்

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம். 5

— பதிபசுபாச விளக்கம்.



### தக்ஷிணமூர்த்தி

மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாள்நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கதுவ நல்கிய
செம்மலை யலதுளம் சிந்தியாதரோ. 6

— திருவானைக்கா புராணம்

### நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள்போற்றி 7

### சண்டேசுரர்

மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினாலெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கடியேன். 8

---

### வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

---

திருக்கானூர்ப் பெருமான் திருவடிபோற்றி.

112837
N56